செய்தி வெளியீடு எண். 84 நாள். 07.02.2018

## கோழிகளுக்கு கழிச்சல் நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்

கோடை காலத்தில் கோழிகளை வெள்ளைக் கழிச்சல் நோய் தாக்கும். இந்த நோயினால் பாதிக்கப்பட்ட கோழிகள் மிகவும் சோர்ந்து, தீவனம் ஏதும் உட்கொள்ளாமல், வெள்ளை மற்றும் பச்சை நிறத்தில் எச்சங்கள் இடும். பாதிக்கப்பட்ட கோழிகளில் இறப்பு ஏற்படலாம். ஆகவே, கோழிக் கழிச்சல் நோயைத் தடுப்பதற்கு தடுப்பூசி முகாம், திருவள்ளூர் மாவட்டம் முழுவதும், 09.02.18 முதல் 22.02.18 வரையிலான காலத்தில் நடைபெறவுள்ளது. கோழி வளர்ப்போர் தங்களது கோழிகளுக்கு இலவசமாக தடுப்பூசி போட்டுக்கொண்டு பயனடைய வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**